பக்கங்கள் 22+6

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை 01.09.2024 | அதிர்வு 31



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ தேரேறி வந்தான் நல்லூர் கந்தன்

CLICK HERE VIDEO





ஈழத்தின் தனிப்பெரும் விழாவான யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவப் பெருவிழாவில் தேர்த் திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது. அகிலம் போற்றும் அலங்காரக் கந்தனின் வருடாந்த மகோற்சவப் பெருவிழாவின் 24 ஆவது நாளுக்கான பூஜைகள் இன்று காலை 6.15 மணி முதல் நடைபெற்றன. காலை 7 மணியளவில் கந்தன் தேரேறி வந்தான். தேர்த் திருவிழாவைக் காண உள்நாட்டிலும், வெளிநாடுகளில் இருந்தும் வருகை தந்துள்ள பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூரானின் வளாகத்தில் குழுமியிருந்தனர். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

# சஜித்துக்கே தமிழரசு ஆதரவு

## தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் போட்டியில் இருந்து உடன் விலக வேண்டும் எனவும் மத்திய குழுவில் தீர்மானம் என்கிறார் சுமந்திரன்



(கே.வசந்தன்)

“வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது. அத்துடன் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் போட்டியில் இருந்து உடனடியாக விலக வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார். 04



# பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ தேரேறி வந்தான் நல்லூர் கந்தன்



















# ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக ஏட்டிக்குப் போட்டியாக வவுனியா நகரில் பலத்தைக் காட்டிய அரசியல்வாதிகள்

(கே.வசந்தன்)

ஜனாதிபதி வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் பிரச்சாரக் கூட்டம் வவுனியாவில் இன்று இடம்பெற்று வரும் நிலையில் அவருக்கு ஆதரவு தெரிவித்து ஏட்டிக்குப் போட்டியாக இரண்டு பேரணிகள் நடைபெற்றன.

அந்தவகையில், குருமன்காட்டில் இருந்து கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கே.கே. காதர் மஸ்தானின் ஆதரவாளர்கள் பேரணியாக ஜனாதிபதியின் பிரச்சாரக் கூட்டம் இடம்பெறும் வைரவபுளியங்குளம் மைதானத்தைச் சென்றடைந்தனர்.

சமநேரத்தில், வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயப் பகுதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு. திலீபனின் ஆதரவாளர்கள் பிரச்சாரக் கூட்டம் இடம்பெறும் வைரவபுளியங்குளம் மைதானத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றடைந்தனர்.

இந்த இரு பேரணியிலும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணிகளால் வவுனியா – மன்னார் வீதி மற்றும் நகரப் பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.
















# உடற்கலங்களுக்குள் குருதி சென்றமையால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணத்தில் உடற்கலங்களுக்குள் குருதி சென்றமையால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இதன்போது பதுளையைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பெரியசாமி திவாகரன் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தருக்குக் கடந்த வியாழக்கிழமை இரத்த வாந்தி ஏற்பட்டது. இதனால் மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

ஈரலில் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் உடற்கலங்களுக்குள் குருதி சென்றமையாலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்தது.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# 5 வயது மகளை சித்திரவதை செய்து வீடியோ எடுத்து மனைவிக்கு அனுப்பிய தந்தை கைது!

தனது 5 வயது மகளைத் தாக்கி சித்திரவதை செய்து அதனைக் காணொளிகளாக எடுத்த தந்தை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெனியாய பொலிஸார் தெரிவித்தனர்.

தெனியாய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய தந்தையே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபர் வெளிநாட்டில் வேலை செய்யும் மனைவியிடம் தனக்கு அதிகளவான பணம் வேண்டும் என்றும், மனைவியின் பெற்றோருக்கு அனுப்பும் பணத்தைத் தனது வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்குமாறும் கூறியுள்ளார்.

மனைவி அவ்வாறு செய்யாமையையடுத்து சந்தேகநபர் தனது 5 வயது மகளைத் தாக்கி சித்திரவதை செய்து அதனைக் காணொளிகளாக எடுத்து மனைவியின் தொலைபேசிக்கு அனுப்பி வைத்து பணம் கோரியுள்ளார்.

இதனையடுத்து, சந்தேகநபரின் மனைவி இது தொடர்பில் தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

பின்னர், பெற்றோர் இது தொடர்பில் தெனியாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து சந்தேகநபர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெனியாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சஜித்துக்கே தமிழரசு...**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று பல மணி நேரமாக வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது. அதன் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் பல மணிநேரமாக இடம்பெற்றது. இதில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரனை ஆதரிப்பதில்லை எனத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. அத்துடன், எமது கட்சி உறுப்பினராகிய அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து உடனடியாக விலக வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

அதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. இதுவரை எமது கட்சி தீர்மானம் எதனையும் அறிவிக்காமையால் கட்சி உறுப்பினர்கள் பலவாறாகச் செயற்பட்டனர். தற்போது தீர்மானம் எடுக்கப்பட்டு சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கட்சி உறுப்பினர்கள் அதற்கேற்றவாறு செயற்படுவார்கள்."

– என்றார்.

இன்றைய தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பங்கேற்கவில்லை. அதேவேளை, கட்சியின் முக்கியஸ்தர்களான சிவஞானம் சிறீதரன் எம்.பி., சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ஆகியோர் இலண்டன் சென்றுள்ளமையால் அவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

# போராட்டங்களை முன்னெடுப்பதற்கு வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவு

(கே.வசந்தன்)

வவுனியா நகரில் இன்று ஆர்ப்பாட் டங்கள் மேற்கொள்வதற்கு காணாமல் ஆக்கப்பட்ட சங்கங்களைச் சேர்ந்த நால்வருக்கு வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இன்று வவுனியா வுக்கு வருகை தந்துள்ளார். அவரின் வருகைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று தகவல்கள் கசிந்திருந்தன.

இதனையடுத்து பொலிஸாரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் மேற்படி நான்கு பேருக்கும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.



அந்தவகையில் வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி சிவாநந்தன் ஜெனிற்றா, தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட் டோர் சங்கத்தின் இணைப்பாளர் கோபாலகிருஷ்ணன் ராஜ்குமார், அந் தச் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா மற்றும் காணாமல்போன அமைப்பைச் சேர்ந்த சண்முகநாதன் சறோஜாதேவி ஆகியோருக்கே இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நால்வரும் வவுனியா நகரில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் 01.09.2024 காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையான காலப்பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் என்பனவற்றை மேற்கொள்வதற்குக் குற்றவியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 106(01) இன் கீழ் தடை விதிக்கப் படுகின்றது என்று நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை உத்தரவுப் பத்திரங்கள் அந் தந்தப் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸா ரால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள் ளது.

# மனைவி மீது துப்பாக்கிச்சூடு நடத்திய கணவர் சிக்கினார்!

(ராமு தனராஜா)

தனது மனைவி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, ஹிந்தகொட பகுதியில் நேற்று மாலை குடும்பத் தகராறு காரணமாக உள்நாட்டில் தயாரிக்கப் பட்ட துப்பாக்கியாலேயே இந்தச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 35 வயதுடைய வெலிமடை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, அந்தத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் 5 , எஸ். எப்.ஜி. ரக கைக்குண்டு ஒன்றும் கைப் பற்றப்பட்டன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம டைந்த பெண் (வயது 33 வயது) கைதான நபரின் மனைவி என்றும், அந்தப் பெண் ணின் கையில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றும், அவர் பதுளை வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச் சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



சந்தேகநபர் தனியார் நிறுவனத் தில் பணிபுரிபவர் என்றும், பதுளை – பசறை வீதியில் ஹிந்தகொட பகுதி யில் 24 வயதுடைய பெண் ஒருவருடன் காதல் உறவு பேணி வந்தார் என்றும், இதை அறிந்த மனைவி மேற்படி பெண் ணின் வீட்டுக்குச் சென்ற வேளையி லேயே கணவரால் துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது.

மேற்படி சந்தேகநபர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்றும் பொலி ஸாரின் விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவரைப் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்த இராணுவச் சிப்பாய்!

கொழும்பு, பத்தரமுல்லை – அக்குரே கொடவில் அமைந்துள்ள இராணு வத் தலைமையகத்தில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த் துக் கொண்டுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தின் பாதுகாப்புக் கூடத்தில் அவர் மேலும் இரண்டு இராணுவச் சிப்பாய்களுடன் கடமையில் இருந்தபோதே இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீரிகம பகுதியைச் சேர்ந்த 31 வயது டைய நபரே சம்பவத்தில் உயிரிழந் துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொடரும் ஜெனிவா

இலங்கையில் ஜானாதிபதித் தேர்தல் களேபரங்களுக்கு மத்தியில் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 57 ஆவது அமர்வு வரும் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் நிலையில் அன்றைய தினமே இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் குறித்துப் பூர்வாங்கமாக விவாதிக்கப்படவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமர்வின் நிகழ்ச்சி இலக்கம் 2 இன் கீழ் இலங்கை விவகாரம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி கவுன்ஸிலில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பின்னர் அறிக்கை தொடர்பான ஊடாடும் உரையாடல் இடம்பெறும்.

2022 செப்ரெம்பரில் - அதாவது மூன்று வருடங்களுக்கு முன்னர் - ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 51/1 இலக்கத் தீர்மானம் பிரகாரம் , மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆணையாளர் அலுவலகம் இலங்கை தொடர்பாகத் தகவல்களைச் சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் பாதுகாக்கவும், அதன் கண்காணிப்பை மேம்படுத்தவும் அதன் ஆற்றலை நீடித்து வலுப்படுத்துவதென முடிவு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் மற்றும் மனித உரிமைகள் மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் உட்பட இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமை பற்றிய கண்காணிப்பை அதிகரிக்குமாறும் அலுவலகத்திடம் அத்தீர்மானத்தில் கோரப்பட்டது.

57ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் அப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஆணை வழங்கியிருந்தது.

இதன்பிரகாரம் இலங்கை தொடர்பாக ஆணையாளர் அலுவலகம் முன்வைத்துள்ளா அறிக்கையைக் கவின்ஸில் முதல் நாள் அமர்விலேயே பூர்வாங்கமாகப் பரிசீலித்து விவாதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்தே இலங்கை விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கையாண்டு வருகின்றது. 15 வருடங்களாகத் தொடர்கதையாக அது நீடிக்கின்றது - எந்த ஆக்கபூர்வமான, திருப்திகரமான முன்நகர்வுகளும் பிரயோசனங்களும் இல்லாமலேயே.

இலங்கை விடயத்தை உன்னிப்பாகக் கவனிப்பது அல்லது பரிசீலிப்பது என்ற பீடிகையோடு இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குக் காலம் குறிப்பிட்டு ஒரு தீர்மானத்தை அவ்வப்போது நிறைவேற்றுவது, அது குறித்து இடையிடையே வரும் அமர்வுகளில் அறிக்கை வெளியிட்டு விவாதிப்பது, பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் காலாவதியாகும் போது திரும்பவும் அடுத்த இரண்டு, மூன்று வருடங்களுக்குச் செல்லுபடியாகக் கூடியதான ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றுவது என்று விடயம் இறப்பர் நாடா மாதிரி இழுபட்டு நீண்டு கொண்டே செல்கின்றது.

'இலங்கையைக் கண்காணிப்பில் வைத்திருத்தல்' என்ற வாய்ப்பேச்சுப் பந்தலுடன் விடயம் 15 ஆண்டுகள் தாண்டியும் இழுபடுவது மட்டுமே நிஜத்தில் நடந்த வருகின்றது.

அந்த வரிசையில் 2022 இல் நிறைவேற்றிய மூன்று ஆண்டு காலத் தீர்மானம் இப்போது காலாவதியாவதால் அதை நீடிக்கச் செய்யும் வகையில் புதிய பிரேரணை ஒன்று இம்முறை சமர்ப்பிக்கப்பட்டு, அது 57/1 என்ற இலக்கத் தீர்மானமாக குறிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட, இந்தச் சக்கரம் வெறும் காலம் இழுபடும் சில்லாகத் தொடர்ந்து சுழன்று கடந்து போகும்.

வழமை போல ஜெனிவாப் பிய்ச்சல், பிடுங்கல் தொடர்ந்தும் அப்படியே நீடிப்பது மட்டும்தான் நிஜத்தில் நடக்கும்.




# கொக்கட்டிச்சோலை பிரதான வீதியின் அவல நிலைமையால் மக்கள் விசனம்

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் இந்த வேளையில், அதற்கான பிரதான வீதி குன்றும் குழியுமாகப் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு படுமோசமாகக் காணப்படுகிறது.

மகிழடித்தீவுச் சந்தியில் இருந்து அம்பிளாந்துறைச்சந்திவரை மிக மோசமாக போக்குவரத்துக்குப் பொருத்தமில்லாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால் வாகனங்களில் பயணிப்போர் மற்றும் பாதசாரிகள் மிகவும் அசௌகரியமடைந்து வருகின்றனர்.

இந்த வீதியில் பிரதேச செயலகம், பிரதேச சபை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆசிரியர் வள நிலையம், கோட்டக்கல்வி அலுவலகம், பல பாடசாலைகள் அமைந்துள்ளன.

இந்த நிலையில் தற்போது ஆலயத் திருவிழா ஆரம்பமாக இருக்கும் நிலையில் ஆயிரக் கணக்கான மக்கள் இந்தப் பாதையால் பயணிக்கவுள்ளனர்.

எனவே இந்த வீதியை புனரமைத்து தர வேண்டும் என்று கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனிடம் பல பொது அமைப்புகள் மகஜர்களை வழங்கி இருக்கின்றன.

முதலைக்குடா கிராம அபிவிருத்தி சங்கம் சார்பில் அதன் தலைவர் முன்னாள் தவிசாளர் அதிபர் சி. அகிலேஸ்வரன், செயலாளர் கி.சுரேஸ்குமார் கையெழுத்திட்டு மகஜர் கையளித்தனர்.

இதன் பிரதிகள் ராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சாணக்கியன், கோ. கருணாகரன் மற்றும் அரச அதிபர் ஆகியோருக்குப் பிரதியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நிந்தவூர் கடற்கரை பிரதேசத்தில குப்பைகளால் சுகாதாரச் சீர்கேடு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் தினசரி குவியும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து காணப்படுகிறது என்று தினசரி கடற்கரை பிரதேசத்துக்குப் பொழுதை கழிப்பதற்காக செல்வோர் விசனம் தெரிவிக்கின்றார்.

நிந்தவூர் பிரதேச சபையால் கடற்கரைப் பிரதேசத்தில் பொது மக்கள் பொழுதை கழிப்பதற்காக கொங்ரீட் கதிரைகள் போடப்பட்டுள்ளன. இவற்றை இனந்தெரியாதோர் உடைத்து சேதப்படுத்தியும் உள்ளனர்.

கடற்றொழிலில் ஈடுபடுவோர் குப்பை கூளங்களில் இருந்து வரும் துர்நாற்றத்தால் தமது தொழிலை நிம்மதியாக செய்ய முடியாமல் உள்ளனர்.

குவியும் குப்பைகளில் விலங்கு கழிவுகளும் அடங்கியிருப்பதால் நாய்கள், பூனைகள் மற்றும் காகங்கள் இவற்றை கிளறி பல பக்கங்களுக்கும் பரப்புவதால் இந்தப் பிரதேசத்தில் பகலிலும் இரவிலும் துர்நாற்றம் வீசுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

வெளியிடங்களில் இருந்து கடற்கரை வீதியால் பயணிக்கும் சிலர் வீட்டுக்கழிவுகளை இரவு வேளைகளில் கடற்கரையோரங்களில் வீசி விட்டு செல்வதாகவும் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்தனர்.



# யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவ முதல்வர்களுக்குச் சின்னம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவர் முதல்வர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் செல்வி சுமதி கந்தசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாணவத் தலைவிகளாக நியமனம் பெற்ற மாணவிகள் அனைவரும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர். பின்னர் சின்னங்களும் சூட்டப்பட்டன.



### கொர்பச்சேவ்:

# அமைதிக்கான முன்னோடியா? சோவியத் உடைப்பின் சூத்தரதாரியா?

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**

2000 வருடத்துக்குள் பூமியிலிருந்து அணு ஆயுதங்களை ஒழித்துவிட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மைக்கேல் கொர்பச்சேவ் கோரினார். அணு ஆயுத விஸ்தரிப்பையும், ஆக்கிரமிப்பு இராணுவ ஆதிக்கத்தையும் ரஷ்யா நிறுத்திய போதிலும், நேட்டோவின் ஐரோப்பிய ஆக்கிரமிப்பு இன்னமும் தொடர்வது ஏன் என்பதே பலரின் கேள்விக்குறியாகும்.

உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் ஒகஸ்ட் 30, 2022 இல் காலமாகி இரு வருடம் ஓடிவிட்டாலும், அவரைப் பற்றிய பார்வை பலவாக உள்ளன. உலக அமைதிக்காக அணு ஆயுதத்தைக் குறைத்த முன்னோடி என்றும், சோவியத் உடைப்பின் சூத்தரதாரி என்றும் பல்வேறு கோணங்களில் அவர் பார்க்கப்படுகின்றார்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் தலைவரான மிகையில் கொர்பச்சேவ் மேற்குலக நாடுகளுடனான பதற்றத்தைக் குறைத்தவர் என்றும், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980 களின் இறுதியில் முடிவுக்கு கொண்டு வந்தவரும் என்றும் மேற்குலக நாடுகளால் பாராட்டப்பட்டவர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் ஒகஸ்ட் 30, 2022 இல் காலமானார்.

கொர்பச்சேவ் சோவியத்தின் சீர்திருத்தவாதி என்றும், புதிய அணுகுமுறையால் உலக அரசியல் அரங்கில் 1985 இல் நுழைந்த போது ஆரம்பத்தில் ரஷ்ய மக்களும் பெரும் நம்பிக்கை கொண்டு கொர்பச்சேவை வரவேற்றனர்.

### 1990 இல் கிடைத்துள்ள அமைதிக்கான நோபல்!

அவரின் சீர்திருத்தங்கள் மீது சோவியத் மக்களும், கிரெம்ளினும் முதலில்

புதிய கொள்கைகளை வரவேற்றனர்.

கொர்பச்சேவ் பதவி ஏற்றவுடன் மேற்கத்திய உலகும் பொதுவாகப் பாராட்டியது. கொர்பச்சேவ் அரசியல் பாணியால் மாஸ்கோ மாறலாம் என்றும், அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆதரவளித்தன.

இதனாலேயே 1990 இல் அமைதிக்கான நோபல் பரிசு கொர்பச்சேவுக்கு வழங்கப்பட்டது. எனினும், மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாக நடந்துகொண்டதாக ரஷ்யாவில் அவருக்குக் கண்டனக் கணைகள் எழுந்ததும் உண்மையே.

அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி ரொனால்ட் ரீகனுடன் நான்கு உச்சி மாநாடுகளில் கலந்து கொண்டார் கொர்பச்சேவ்.

1987 இல் நடந்த சந்திப்பின் போது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஒன்றில் இருவரும் கையெழுத்திட்டனர். அதன்படி, ஐரோப்பாவில் வைக்கப்பட்டிருந்த இரு நாடுகளின் ஏவுகணைகள் அகற்றப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980 களின் இறுதியில் முடிவுற்றது. அத்துடன் சோவியத் யூனியன் சிதறுண்டு பல நாடுகளாகப் பிரிந்ததும் அந்தக் காலகட்டத்தில்தான்.

### பனிப்போர் முடிவு

சோவியத் வீழ்ச்சி அடையும் கால கட்டத்திலேயே ஆப்கானிஸ்தானில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோவியத் துருப்புகள் 1988 இல் திரும்பப் பெறப்பட்டன. அதே போல அங்கோலாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த கியூபாவும், கம்போடியாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த வியட்நாமும் தங்கள் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் கொர்பச்சேவ் வலியுறுத்தினார்.



1989 இல் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்த கொர்பச்சேவ், பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்தார். 1980 களின் இறுதியில் இரும்புத் திரை நாடுகள் என்று மேற்கத்திய நாடுகளால் கருதப்பட்ட செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜேர்மனி, போலந்து போன்ற நாடுகள் ஜனநாயகப் பாதைக்குச் செல்வதை அவர் தடுக்கவில்லை என்றும் புகழப்பட்டார்.

### பெரஸ்ட்ரோயிகா - கிளாஸ்நாத்

கொர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களும் சோவியத் யூனியனின் பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்கு உந்துசக்தியாகும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் பிரச்சினைகளைத் தீர்த்ததா என்றால் இல்லை என்றே கூறலாம். இந்தச் சீர்திருத்தங்கள் பலனை உடனடியாகத் தரவில்லை. சோவியத் யூனியனின் ஒரு கட்சி ஆட்சியிலிருந்த அதிகார வர்க்கப் பொருளாதாரத்தைச் சந்தை பொருளாதாரம் திடீரென ஓரிரவில் மாற்றுவது இலகுவானதல்ல.

சந்தைப் பொருளாதாரம் முதிர்ச்சியடைய அதிக காலம் வேண்டும் என்பதால் அது வெற்றியடைவில்லை. அதனாலேயே கொர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களின் பலன்கள் தாமதமாகத்தான் வரும் என்பதால் அப்போது இருந்த பிரச்சினைகள் குறையவில்லை என்பதும் உண்மையே.

### சோவியத் ஒன்றிய வீழ்ச்சி

சோவியத் நாட்டில் சிறந்த பொருளாதாரம் சாத்தியமாவது உலகின் பிற பகுதிகளுடன், குறிப்பாக அமெரிக்காவுடன் சிறந்த உறவுகளைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது என்று கொர்பச்சேவ் நம்பினார். அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், சோவியத் ஒன்றியத்தை அழிப்பதில் மும்முரமாக இருந்தார். மேலும் உலகெங்கிலும் இருந்த அமெரிக்க இராணுவக் கட்டமைப்பை விரிவு படுத்தினார். இருந்த போதிலும் கொர்பச்சேவ் ஆயுதப் போட்டியிலிருந்து வெளியேறுவதாக உறுதியளித்தார்.

கிழக்கு ஐரோப்பாவில் மாற்றங்கள் சோவியத் யூனியனையும் பாதிக்கத் தொடங்கின. கொர்பச்சேவின் சீர்திருத்த அணுகுமுறையால் சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகளில் சுதந்திரத்துக்கான இயக்கம் தொடங்கியது.

1991 இல் பால்டிக் நாடுகள் (எஸ்டோனியா, லிதுவேனியா மற்றும் லாட்வியா) ஒவ்வொன்றாக, மாஸ்கோவிலிருந்து பிரிந்து தங்கள் சுதந்திரத்தை அறிவித்தன. மாஸ்கோவில் ஒகஸ்ட் 18, 1991 அன்று, சோவியத் இராணுவத்தாலும் அரசாலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கொர்பச்சேவை வீட்டுக் காவலில் வைத்தனர்.

இதன்பின் கொர்பச்சேவ் தலைமைபதவியை

தொடர்ச்சி▼

# அமைதிக்கான முன்னோடியா? சோவியத் உடைப்பின் சூத்திரதாரியா?

**தொடர்ச்சி▲**

ராஜினாமா செய்வது தவிர்க்க முடியாமல் போனது. 1991 கிறிஸ்துமஸ் தினத்தன்று, அவர் தனது பதவியை விட்டு விலகினார்.

அப்போது அவர் ஆற்றிய உரையில், “நாங்கள் இப்போது ஒரு புதிய உலகில் வாழ்கிறோம். பனிப்போர் மற்றும் ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நமது பொருளாதாரம், பொது அணுகுமுறைகள் மற்றும் ஒழுக்க நெறிகளை முடக்கிய நாட்டின் பைத்தியக்காரத்தனமான இராணு வமயமாக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே வலிமைமிக்க சோவியத் யூனியன் சிதைந்து வீழ்ந்தது.

மைக்கேல் கொர்பச்சேவ் சோவியத் உடைவின் பின் “சர்வதேச உறவுகளில் நாம் ஒரு சகாப்தத்தை விட்டு, மற்றொன்றுக்குள் பிரவேசிக்கிறோம், அது உறுதியான, நீடித்த சமாதானத்தின் காலப்பகுதியென நான் எண்ணுகிறேன்” எனக்கூறினார்.

**அணு ஆயுத கட்டுப்பாடு**

செர்னோபில் அணு உலை விபத்து ஏற்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு, ஏப்ரல் 1996 இல், மிக்கேல் கொர்பச்சேவ் கூறுகையில் “ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான பிள்ளைகள் இறக்கிறார்கள் என்ற கவிடயத்தை மனித குலம் இனி சகித்துக்கொள்ள முடியாது.

அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாங்கள் தயாராய் இருக்கவே இல்லை. இந்த அவல நிகழ்ச்சி, மனிதகுலம் கண்டுபிடித்திருக்கும் ராட்சத சக்திகளை இதுவரை கட்டுப்படுத்த முடிவதில்லை என்ற உண்மையின் கொடூர நினைப்பூட்டுதலாய் இருந்தது.” என்று ஜனாதிபதி மிக்கேல் கொர்பச்சேவ் குறிப்பிட்டார்.

மே 1990 இல் வாஷிங்டன் டி. சியில் நடைபெற்ற வல்லரசு மாநாடு ஒன்றின் போது, சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கொர்பச்சேவ் ஐரோப்பிய நாடுகளின் இரண்டு கூட்டணிகளும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்று யோசனையை தெரிவித்தார்.

நடுத்தர குறுகிய தூரம் செல்லும் தரை சார்ந்த ஏவுகணைகளை ஒழிப்பது சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் சோவியத் யூனியன் ஜனாதிபதி மிகேயல் கொர்பச்சேவுக்கு அமெரிக்க டொனால்டு ரீகனும் மாஸ்கோவில் கூடியபோது நிறைவேறியது.

2000 வருடத்துக்குள் பூமியில் இருந்து அணு ஆயுதங்களை ஒழித்துவிட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மைக்கேல் கொர்பச்சேவ் சொன்னார். இதற்கான வழி அணு ஆயுதங்களற்ற, வன்முறையில்லா ஓர் உலகமாக முன்னேறிச் செல்வதில் இருக்கிறது என சோவியத் தலைவர் மிக்கேல் கார்பஷாவ் எழுதிய பெரஸ்ட்ரோய்க்கா நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் க்ளாஸ் நாஸ்ட் மற்றும் பெரஸ்ட் ராய்க்கா கோட்பாடுகளை செயலுக்குக் கொண்டு வருவதில் கொர்பச்சேவ்வுக்கு இருந்த ஆர்வமே, சோவியத் உடைவுக்கும், அவர் சோசலிச– கம்யூனிஸத்தை உலகில் அழிக்க அமெரிக்காவுடன் சேர்ந்து நோக்கம் கொண்டிருந்தார் என்றும் ரஷ்யாவில் இன்னமும் குற்றஞ்சாட்டப்படுகிறது.





# தொழிற்கல்வி கற்கைகளைப் பூர்த்தி செய்த 250 பயிலுனர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

**(எஸ்.எம்.எம்.றம்ஸான், நூருல் ஹுதா உமர்)**



எபெக்ஸ் கம்பஸ் மொழி மற்றும் தொழில் பயிற்சி நிலையத்தின் பூரண அனுசரணையுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபை மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்துடன் இணைந்து தொழிற் கல்வி கற்கைநெறிகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 250 பயிலுனர்களை கௌரவித்து அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை கைத் தொழில் அபிவிருத்திச் சபைத் தவிசாளர் கலாநிதி சாரங்க அழகப்பெரும பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். மேலும் கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண, கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், கிழக்கு மாகாண சுற்றுலா நிலைய பிரதம நெறிப்படுத்துனர் மோகன் கணபதிப் பிள்ளை, கைத்தொழில் அபிவிருத்தி சபை கிழக்கு மாகாண பணிப்பாளர் அத்துல திசாநாயக்க, எபெக்ஸ் கெம்பஸ் தவிசாளர் எம். எஸ். ஜெஸ்லின் ரிசாட், எபெக்ஸ் கெம்பஸ் கல்வி மேம்பாட்டு பணிப்பாளர் ஏ.ஆர் .எம். சர்ஜூன், கைத்தொழில் அபிவிருத்தி சபை மட்டக்களப்பு கிளை உத்தியோகத்தர் என். கோகுலதாஸ், பணிப்பாளர் கலாநிதி கலாரஞ்சனி மற்றும் மேலதிக அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய ரீதியாக சாதனையீட்டிய தொழில் வல்லுநர்கள், ஆசிரியர்கள், விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை, பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி முகாமைத்துவம் போன்ற பாடப்பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கே இச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளைக் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட "கிழக்கு மாகாண சுற்றுலா மையம்" செயற்றிட்டத்தில் உள்ள 20 தொழில் முயற்சியாளர்கள் முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கான நிதி, தொழில் விருத்தி செய்வதற்கான வழிவகைகளும் எபெக்ஸ் கம்பஸ் மொழி மற்றும் தொழில் பயிற்சி நிலையத்தால் செய்து கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலய திருவிழாவை முன்னிட்டுப் பாதயாத்திரை







வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு எட்டு நாள்களைக் கொண்ட ஆன்மீக பாதயாத்திரை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் இது இடம்பெற்று வருகின்றது.

கடந்த புதன்கிழமை மண்டூர் கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து யாத்திரை ஆரம்பமாகியது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகிய ஆன்மீக பாதயாத்திரை மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகியது. எதிர்வரும் 04 ஆம் திகதி புதன்கிழமை காலை வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்தை சென்றடையவுள்ளது.

யாத்திரையில் நந்திக்கொடி ஏந்திய வாறு அரோகரா கோசத்துடன் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இப்பாதயாத்திரை மண்டூர் கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து மண்டூர் விஷ்ணு ஆலயம், மண்டூர் மாணிக்கம் சாமியார் தண்ணீர்ப் பந்தல், துறையடி மாரியம்மன் ஆலயம், குறுமன்வெளி விநாயகர் ஆலயம், குருமன்வெளி நாகதம்பிரான் ஆலயம், எருவில் அம்மன் ஆலயம், எருவில் ஐயனார் ஆலயம், பட்டிருப்பு பிள்ளையார் ஆலயம், களுவாஞ்சிக்குடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம், தேத்தாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயம், மாங்காடு பிள்ளையார் ஆலயம், செட்டிபாளையம் முருகன் ஆலயம், செட்டிபாளையம் பிள்ளையார் ஆலயம், குருக்கள்மடம் செல்லக் கதிர்காமர் ஆலயம், குருக்கள்மடம் ஐயனார் ஆலயம், கிரான்குளம் கணபதிப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றைச் சென்றடையும்.

அங்கிருந்து கிரான்குளம் மகா விஷ்ணு ஆலயம், புதுக்குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம் தாளங்குடா விநாயகர் ஆலயம், தாளங்குடா சரீரம் விஷ்ணு ஆலயம், ஆரையம்பதி சிவன் ஆலயம், ஆரையம்பதி திருநீலகண்ட பிள்ளையார் ஆலயம், பத்திரகாளியம் மன் ஆலயம், கண்ணகையம்மன் ஆலயம், கந்தசுவாமி, ஆரையம்பதி பரமநயினார், மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர் ஆலயம், சித்தி விநாயகர் ஆலயம், நாவற்குடா மாரியம்மன் ஆலயம், நாவற்குடா விஸ்ணு ஆலயம், கல்லடி பேச்சியம்மன் பிள்ளையார் ஆலயம், கல்லடி முருகன் ஆலயம், கல்லடி பிள்ளையார் ஆலயம், தாமரைக் கேணி மாரியம்மன் ஆலயம், கீரிமடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மாமாங்கம் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை சென்றடையும்

பின்னர் மாமாங்கம் மாரியம்மன் ஆலயம், பெரிய ஊரணி பத்திரகாளியம் மன் ஆலயம், கொத்துக்குளம் மாரியம் மன் ஆலயம், பிள்ளையாரடி விநாயகர் ஆலயம், மயிலம்பாவெளி ஸ்ரீ முருகன் ஆலயம், மயிலம்பாவெளி சித்தி விநாயகர் ஆலயம், ஆறுமுகத்தான் குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம், ஏறாவூர் பிள்ளையார் ஆலயம், ஏறாவூர் கருமாரியம்மன் ஆலயம், வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலயம், ரமேஷ்புரம் சித்திரவேலாயுதர் ஆலயம், சிவ தொண்டர் நிலையம், கொம்மாதுறை தேவி கோயில், கொம்மாதுறை பிள்ளையார் ஆலயம், வந்தாறுமூலை விஸ்ணு ஆலயத்தை சென்றடையும்.

தொடர்ந்து வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் ஆலயம், மருங்கையடிப் பிள்ளையார் ஆலயம், சித்தாண்டி சந்திப் பிள்ளையார் ஆலயம், சித்தாண்டி சித்திரவேலாயுதர் ஆலயம், முறக்கொட்டான்சேனை மகமாரியம்மன் ஆலயம், முறக்கொட்டான்சேனை விஷ்ணு ஆலயம், சந்திவெளி புதுப்பிள்ளையார் ஆலயம், கோரகல்லிமடு சித்தி விநாயகர் ஆலயம், கிரான் சித்தி விநாயகர் ஆலயம், கிரான் அம்மன் ஆலயம், கும்புறுமூலை முனீஸ்வரர் ஆலயம், கறுவாக்கேணி முத்துமாரியம்மன் ஆலயம், பெற்றோல் நிலைய பிள்ளையார் ஆலயம், வைத்தியசாலை சித்தி விநாயகர் ஆலயம், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலயத்தை சென்றடையும்.

இன்று முதலாம் திகதி வாழைச்சேனை பேச்சியம்மன் ஆலயம், வாழைச்சேனை ஸ்ரீகைலாயப்பிள்ளையார் ஆலயம், மயிலங்கரச்சை மாரியம்மன் ஆலயம், வட்டவான் சித்தி விநாயகர் ஆலயம், காயான்கேணி விஸ்ணு ஆலயம், மாங்கேணி செல்வ விநாயகர் ஆலயத்தை சென்றடையும்.

நாளை 02 ஆம் திகதி மாவடி ஓடை விஷ்ணு ஆலயம், பனிச்சங்கேணி முருகன் ஆலயம், வாகரை வைத்தியசாலை பிள்ளையார் ஆலயம், வாகரை செல்வ விநாயகர் ஆலயம், வாகரை செல்வ விநாயகர் ஆலயம், வாகரை சிவமுத்துமாரியம்மன் ஆலயத்தை சென்றடையும்.

நாளை மறுதினம் 03 ஆம் திகதி புளியங்கண்டலடி மாரியம்மன் ஆலயம், கண்டலடி பத்திரகாளியம்மன் ஆலயம், அம்பந்தனாவெளி பிள்ளையார் ஆலயம், பால்சேனை பிள்ளையார் ஆலயம், பால்சேனை நாகதம்பிரான் ஆலயம், புச்சாக்கேணி செந்தூர் முருகன் ஆலயம், கதிரவெளி வைத்தியசாலை பிள்ளையார் ஆலயம், கதிரவெளி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், கதிரவெளி பத்திரகாளி அம்மன் ஆலயத்தை சென்றடையும்.

04 ஆம் திகதி கதிரவெளி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து காலை வேளை வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தை சென்றடையும் என்றும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் தெரிவித்துள்ளார்.






# மருதமுனைக் கடற்கரையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டத் தின் கீழ் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மருதமுனை கடற்கரையைத் துப்பரவு செய்யும் வேலைத்திட்டம் அம் பாறை அரச அதிபர் சிந்தக அபேவக் கிரம தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது மருதமுனை கடற்கரை யில் இருந்து பாண்டி ருப்பு கடற்கரை வரை கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் கீழ் துப்பரவு செய்யப்பட்டது.



பிரண்ட்ஷிப் பவுண்டேஷனால் வழிநடத்தப்பட்ட இந்தத் திட்டத்துக்கு சுதேச முயற்சிகளுக்கான கனடா நிதி யம் மற்றும் கனேடிய தூதரகம் நிதியுதவி அளித்தன. இதில் சிங்கள, முஸ்லிம், தமிழ் இளைஞர் சமூகம் கலந்து கொண்டதுடன், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய தூதர் எரிக் வால்ஷ், கல்முனை மாநகர சபை பிரதி ஆணையாளர் ஏ.எச்.அசீம் உட்பட மக்களும் கலந்து கொண்டனர்.



# காரைதீவு கோட்டத்தில் இடம்பெற்றுள்ள ஆரம்ப மாணவர்களின் சிறுவர் சந்தை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவு ஆசிரியை றிஸ்வானாவின் நெறிப் படுத்தலில் மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் சந்தை நடைபெற் றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.அஸ் மியின் ஆலோசனை மற்றும் வழிக் கட்டலில் பெற்றோரின் பங்களிப்புடன் இது இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.







# காரைதீவு பிரதேசத்தில் வாழ்வாதார உதவிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் வழி காட்டலில் காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தி யோகத்தர் ஒழுங்கமைப்பில் உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் தலைமையில் யுனிசெப் மற்றும் செரி நிறுவனத்தின் "மாற்றுப் பராமரிப்புக் குடும்ப வலுப்படுத்தல்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவி மற்றும் கற்றல் உபகரணங்கள் மற்றும் சைக்கிள்கள் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப் பட்டன.




# தலவாக்கலையில் மாணவர் சந்தை

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் ஆசிரியை கேதீஸ்வரி ஏற்பாட்டில் மாணவர் சந்தை நடைபெற்றது.

இதன்போது பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.







# சம்மாந்துறை ஸாஹிரா மாணவர்கள் ஆங்கில தின நாடகத்தில் முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி மாவட்ட பாட சாலைகளுக்கு இடையிலான ஆங்கில தின மற்றும் நாடகப் போட்டியில் சம் மாந்துறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட சம்மாந்துறை செந்நெல் ஸாஹிரா மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர்.

பாடசாலை அதிபர் யூ.எல்.எம்.இஸ் மாயில் தலைமையில் இடம்பெற்ற வெற்றியீட்டிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இந்த மாண வர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.




# அகில இலங்கை மக்கள் காங்கிரசின் சாய்ந்தமருதுப் பணிமனை திறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை மக்கள் காங்கிரசின் சாய்ந்தமருதுக்கான மக்கள் பணிமனை திறப்பு விழா சாய்ந்தமருது -11 கல் யாண வீதியில் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினரும் முன்னாள் பொதுச்சேவை ஆணைக்குழு உறுப் பினருமான ஏ.எல். சலீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷ ாட் பதியுதீன் மக்கள் பணிமனையை திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கட்சியின் தவி சாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். எஸ். அமீர் அலி, கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான அப்துல் றஷாக், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்க ளான எம்.ஏ.எம். அஸ்றப் தாஹிர், எம்.ஏ. அன்சில், எம்.எம். மாஹிர், கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ரிஷ்லி முஸ்தபா, உயர்பீட உறுப்பினர் எம்.முபீத் ,கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், கட்சியின் போராளிகள், பொது மக்களென பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# நற்பிட்டிமுனை மஹா விஷ்ணு ஆலய ராஜகோபுரத்துக்கு அடிக்கல் நடப்பட்டது

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை நற்பிட்டிமுனை ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலய ராஜகோபுர அடிக்கல் நடும் விழா நேற்று (31) சனிக் கிழமை காலை 10.30 மணியளவில் இடம் பெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கஜன் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெற்று அதிதிகளால் அடிக்கல் நடப்பட்டது.

இந்த ராஜகோபுரத்தை சேதுபதிப் பிள்ளை மனோன்மணி குடும்பம் ஞாபகார்த்தமாக திருமதி சுந்தரலிங்கம் இந்திராதேவி குடும்பத்தினர் உபயமாக அளிக்கின்றனர்.

உபயகாரர் குடும்பத்தினர் திருமதி சுந்தரலிங்கம் இந்திராதேவி, சுந்தர லிங்கம் சுரேஷ், சுந்தரலிங்கம் முகுந் தன் குடும்பத்தினரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பலரும் அடிக்கல் நட்டனர்.

பாலஸ்தாபனம் செய்யப்பட்ட ஆலயத்தில் இதனை ஒட்டிய விசேட பூஜையும் இடம்பெற்றது.

பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஆலய பரிபாலன சபை யினர் சகல ஏற்பாடுகளையும் செய் திருந்தனர்.






# தட்சணாமருதமடு மகா வித்தியாலய மாணவியின் இரண்டு சாதனைகள்

(மன்னார நிருபர்)

2024 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியில் மன்னார் தட்சணா மருதமடு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி யோகேஸ்வரன் சுடர்மதி மீண்டும் இரண்டு வரலாற்று சாதனைகளை நிகழ்த்தி மடு வலயத்துக்குப் பெருமையீட்டிக் கொடுத்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற மாகாணமட்ட திறனாய்வு போட்டியில் 18 வயதின் கீழ் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி நிகழ்ச்சியில் கடந்த ஆண்டுகளில் நிகழ்த்தப் பட்டிருந்த 1:12:90 நிமிடங்களில் ஓடி முடித்த சாதனையை முறியடித்து 1:11:90 நிமிடங்களில் ஓடி முடித்து புதிய சாதனையை நிகழ்த்திய தோடு 100 மீற்றர் சட்டவேலி நிகழ்ச்சியில் கடந்த ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்டிருந்த 17:03 வினாடிகளை முறியடித்து அதனை 16:90 வினாடிகளில் ஓடி முடித்து இரு நிகழ்வுகளிலும் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டதுடன் வடமாகாணத்தில் 18 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் 725 புள்ளிகளை பெற்று சிறந்த வீராங்கனைக்கான விருதையும் பெற்றுக்கொண்டார்.

கடந்த வருடம் இடம்பெற்ற மாகாணமட்ட மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியிலும் 300 மீற்றர் சட்டவேலி நிகழ்வில் புதிய சாதனையை நிகழ்த்தியதோடு சிறந்த வீராங்கனைக்கான விருதைப் பெற்றிருந்தார்.

இதுமட்டுமல்லாது இம்மாணவி மாகாணமட்ட தைக்கொண்டோ போட்டியில் 18 வயதின் கீழ் பெண்கள் 52-55 கிலோ கிராம் எடைக்கு உட்பட்ட பிரிவில் கலந்து கொண்டு முதல் இடத்தை பெற்றுள’ளார். கடற்கரை கரப்பந்து





போட்டியிலும் கலந்து கொண்டு கடுமையான போட்டிக்கு மத்தியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.


மேலுமொரு சாதனையாக 14 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் 80 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் சு.வர்ஷாலினி ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட 15.02 வினாடிகள் சாதனையை முறியடித்து 14.6 வினாடிகளில் ஓடி பழைய சாதனையை முறியடித்து கடும் போட்டிக்கு மத்தியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

யு.நிஷோலினி 400 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 3 ஆம் இடத்தையும் வினுசிகா 80 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் 4 ஆம் இடத்தையும் மு.கோணிலா ஈட்டி எறிதலில் 5 ஆம் இடத்தையும் ஞ.அபிசா 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 5 ஆம் இடத்தையும் பெற்று வட மாகாணத்தில் அதி கூடிய பத்து பாடசாலைகளில் எமது பாடசாலை பெண்கள் பிரிவில் 6 ஆம் இடத்தை பெற்றுள்ளார்.

மடு வலயத்துக்குப் பெருமையீட்டிக் கொடுத்த பாடசாலையாக இந்தப் பாடசாலை திறன்பட்டு விளங்குகின்றது.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் திருவிழா!

(வி.ரி.சகாதேவராஜா)



வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இவ் ஆலயத்தின் பிரதான நிகழ்வான தேரோட்ட நிகழ்வு 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

மறுநாள் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த் தோற்சவம் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையின் தலைவர் இ. மேகராசா தெரிவித்தார் .

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு. கு. சச்சிதானந்த குருக்கள் தலைமையில் திருவிழாக்கள் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளன.





# புற்களைத் தேடி அலையும் யானைகள்; பெரும் அச்சத்தின் மத்தியில் மக்கள்!

(பாறுக் ஷிஹான்)

யானை கூட்டம் ஒன்று இரு வேறு பிரிவாக புதிதாக முளைக்கும் புல் இனங்களை நாடி உண்பதற்காக வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான யானைக் கூட்டங்கள் திடிரென சம்மாந்துறை ஊடாக காரைதீவு மாவடிப்பள்ளி, நிந்தவூர் பகுதிகளை ஊடறுத்து வருகை தருகின்றன.

இதன் போது குறித்த யானைகள் அங்குள்ள புல் இனங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானை குட்டிகள் விளையாடுவதையும் காண முடிந்தது.

இந்த யானைக் கூட்டத்தை பார்வையிட மாவடிப்பள்ளி பாலம், காரைதீவு இநிந்தவூர் ,சம்மாந்துறை, பகுதிகளில் பொதுமக்கள் திரண்டு வருகின்றனர்.

இப் பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதனாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 150 இற்கும் மேற்பட்ட யானைகள் உண்ணுவதற்கு வருகை தருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன.

இது தவிர கடந்த 2024 ஓகஸ்ட் மாதம் யானைகள் கணக்கெடுப்பை வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் நடத்தி இருந்தது. குறித்த கணக்கெடுப்பானது 13 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்றது. இறுதியாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்த நாட்டின் காடுகளில் 5000 முதல் 6000 யானைகள் இருப்பதாக வனவிலங்கு அதிகாரிகள் கூறியுள்ளனர். பொதுவாக இலங்கையில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை யானைகள் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடைசியாக 2011 ஆம் ஆண்டு யானைகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன் பின்னர்இ வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் யானைகள் கணக்கெடுப்பை 2021 இல் நடத்த திட்டமிட்டிருந்த போதிலும் கொவிட் தொற்றுநோய் காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் 3130 நிலை யங்களில் யானைகள் கணக்கெடுப்பு மேற் கொள்ளப்படுகின்றது.

நாட்டில் வாழும் யானைகளின் முழுமையான எண்ணிக்கையை உறுதிசெய்துகொள்ளக்கூடிய வகையில் நாடளாவிய ரீதியில் தரவுகள் மற்றும் தகவல்களை புதுப்பிக்க 2011 ஆம் ஆண்டின் பின்னர் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதனால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானைகளுக்கான புதிய பாதுகாக்கப்பட்ட பகுதிகளை உருவாக்குதல், தற்போதுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளை மேம்படுத்துதல், யானை – மனித மோதலை தடுப்பதற்கான மூலோபாய திட்டங்களை தயாரித்தல் மற்றும் புதுப்பித்தல், வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துதல் ஆகியவை இந்த கணக்கெடுப்பின் முக்கிய நோக்கங்களாகும்.

ஆசியாவில் யானைகள் வாழும் குறிப்பிட்ட சில நாடுகளில் ஒன்றாகவுள்ள இலங்கையில் யானைகளின் பாதுகாப்பு தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச பாதுகாப்பு முயற்சிகளுக்கு அமைவாக அதனை நாட்டின் பொறுப்பாக உருவாக்கியுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

# கிழக்கு மாகாண விளையாட்டு உத்தியோகத்தருக்கு பிரியாவிடை

(பழுவூரான்)

கிழக்கு மாகாண சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தரும் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருமான வி. ஈஸ்பரனுக்கான பிரியாவிடை நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.



கிழக்கு மாகாண சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தரும் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருமாகக் கடமையாற்றும் வி. ஈஸ்பரன் தனது அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்வதை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களால் இந்த நிகழ்வு ஏற்பாட்டு செய்யப்பட்டிருந்தது.



இதன்போது விளையாட்டு உத்தியோகத்தர்களால் அனுபவப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டது. அவர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.




# இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையத்தால் பாடசாலை மாணவர்களுக்கு விவாத போட்டி

(மன்னார் நிருபர்)

இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான விவாத போட்டி நடத்தப்பட்டது.

இலங்கை மழை நீர் சேகரிப்பு அமையமானது கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மழை நீர் தாங்கிகள் மூலம் மக்களுக்கு தரமான மற்றும் சுகாதாரமான குடி தண்ணீர் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் தற்போது இலங்கையில் வெள்ளம் மற்றும் வறட்சி ஏற்படும் பிரதேச மக்களுக்கான சுத்தமான குடி தண்ணீரைப் பெற்றுக் கொடுத்தல் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் யு.எஸ். எயிட். இன் அனுசரணையுடன் இயங்கி வருகிறது.

அதற்கமைவாக வடமாகாணத்தின் மன்னார் மாவட்டங்களில் இருந்து மழைநீர் சேகரிப்பு தாங்கிகள் மூலம் பயனடைந்த பாடசாலை மாணவர்கள் இந்த விவாத போட்டியில் பங்குபற்றினர்.




நீர் பற்றாக்குறை நிலவும் கிராமப்புறங்களில் மழைநீர் சேகரிப்பு அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்படும் செலவில் அரசின் பங்களிப்பு போதுமானதாக உள்ளது - இல்லை எனும் தலைப்பில் விவாதம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி மாவட்ட செயலாளர், மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தர்கள், USAID இன் செயற்திட்ட இணைப்பாளர், இலங்கை மழைநீர் சேகரிப்பு ஒன்றிய உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இறுதி சுற்று போட்டியில் பங்குபற்றி மன்னார் பரிகாரி கண்டல் அ.த.க.பாடசாலை முதலாம் இடத்தையும் கட்டையடம்பன் றோ.க.த.க.பாடசாலை இரண்டாம் இடத்தையும் தலைமன்னார் அ.த.க.பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# போதைப் பாவனையாளருக்கு சிகிச்சையளித்தல் செயலமர்வு

(றியாஸ் ஆதம்)

போதைவஸ்து பாவனையில் உள்ள நபர்களை நிர்வகிப்பதற்கான வழிகாட்டுதல் மற்றும் சிகிச்சையளித்தல் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.





சுகாதார அமைச்சின் உளநல பணியகத்தின் பணிப்புரைக்கமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய உளநல பிரிவு குறித்த பயிற்சி செயலமர்வை ஒழுங்கு செய்திருந்தது.

பிராந்திய பிரிவுத் தலைவர்கள், கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட 40 பேர் இந்தப் பயிற்சிச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.



இதன்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன், வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஜீ.எம்.ஜஃரைஜ், பிராந்திய உளநல பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரையாற்றினர்.





# இரும்புச் சத்தடங்கிய பிஸ்கட்கள் கிழக்கில் அறிமுகப்படுத்தப்படும்!

## காரைதீவில் கிழக்கு மாகாண ஆயுள்வேத ஆணையாளர் நபீல் தெரிவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் நமக்கெல்லாம் தேவையான இரும்புச் சத்து அடங்கிய பிஸ்கட் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று காரைதீவில் இடம்பெற்ற ஆயுள்வேத மத்திய மருந்தக பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய சுதேச மருத்துவ திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் டாக்டர் எம்.ஏ. நபீல் தெரிவித்தார்.

காரைதீவு ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் மருந்தக பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். சி. எம். காலித் தலைமையில் காரைதீவு இராமகிருஷ்ண சங்கம பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது .

கௌரவ அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் சகிலா ராணி இஸ்ஸதீன், நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித், உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பிஸ்கட் தற்சமயம் தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது . அதற்கான முடிவு வந்ததும் கல்முனையில் வைத்து அதனை அறிமுகப்படுத்தி அனைவருக்கும் வழங்க வைத்திருக்கின்றோம் என்ற செய்தியை மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன் என்று மேலும் தெரிவித்தார்.

மாகாண ஆணையாளராக அண்மையில் பதவியுயர்வு பெற்ற டாக்டர் நபீல் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மத்திய மருந்தகம் நடத்திய மாணவர்கள் இடையிலான ஆயுள்வேதம் பற்றிய வினா விடை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கூடவே டாக்டர் காலித் எழுதிய "சுற்றாடலும் சுக வாழ்வும்" என்ற சிறு சஞ்சிகை அங்கு இலவசமாக அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.



# தம்பலகாமத்தில் நடைபெற்றுள்ள தொழில் துறை விருத்திச் செயலமர்வு

(ஹஸ்பர்)

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு சென்று மீளநாடு திரும்பி சுயதொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நபர்களுக்கான தொழில் துறை விருத்தி மற்றும் நிலைத்து நிற்றல் தொடர்பாக ஒரு நாள் செயலமர்வு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தொழில் ஒன்றைத் தெரிவு செய்யும் முறை, அதனை கையாளும் விதம் மற்றும் போட்டிச் சந்தையில் நிலைத்திருக்கும் முறை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பொதுமக்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தக்க பதிலும் வளவாளர்களால் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இதில் வளவாளர்களாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவின் மாவட்ட இணைப்பாளர் மு. ரமணபிரசாந்த், இவ்வமைச்சின் பயிற்சி பிரிவின் பொறுப் பாளர் சுமனதாச மற்றும் கந்தளாய், தம்பலகாமம் பிரதேச செயலக வெளி நாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ஆந்திரா, தெலுங்கானாவில் கனமழையால் கடும் பாதிப்பு; 8 பேர் பலி, ரயில்கள் ரத்து

தெலுங்கானாவில் கனமழை பெய்துவரும் நிலையில் மாநிலத்தில் இன்று 9 மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை, 12 மாவட்டங்களுக்கு கனமழைக்கான செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 19 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலையால் ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்ட அறிக்கையின்படி, வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை இன்று வடக்கு ஆந்திரப் பிரதேசம் - தெற்கு ஒடிசாவின் கடற்கரைகளுக்கு இடையே கலிங்கப்பட்டினம் அருகே கரையைக் கடந்தது. இது மேலும் வடமேற்கு, வடக்கு ஆந்திராவை, தெற்கு ஒடிசா, சத்தீஸ்கர், தெலங்கானா ஒட்டிய பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்துக்கு நிலை கொண்டிருக்கும். இதனால் ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, சத்தீஸ்கரில் தொடர் மழை பெய்து வருகிறது.

தெலுங்கானாவில் கனமழையால் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திராவில் பெய்துவரும் கனமழை தொடர்பான சம்பவங்களில் சிக்கி 8 பேர் உயிரிழந்தனர். இவர்களில் ஐந்து பேர் விஜயவாடாவின் மொகல்ராஜபுரம் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஐந்து பேர் உயிரிழந்தனர்.

பல தாழ்வான பகுதிகளிலும் இருந்து மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர். இதுவரை 80 பேர் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

முதல்வர் சந்திரபாபு நாயுடு மழை நிலவரம் பற்றி தொடர்ந்து அதிகாரிகளுடன் ஆலோசித்து உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உடனடியாக ரூ.3 கோடியை நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக விஜயவாடா - வாரங்கல் மார்க்கத்தில் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. விஜயவாடா - கம்மம் பாதையில் அனைத்து ரயில்களும் நிறுத்தப்பட்டுள்ளன. மகபூபாத் ரயில் நிலையம் அருகே உள்ள தண்டலபுசலபல்லி அருகே தண்டவாளம் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

பல பகுதிகளிலும் சாலைகளில் நீர் சூழ்ந்துள்ளது. ஆந்திரா, தெலங்கானாவில் உள்ள அனைத்து நீர் நிலைகளிலும் அடுத்த இரண்டு நாள்களுக்கு வெள்ளப் பெருக்கு நிலவும் என்று மத்திய நீர் ஆணையம் எச்சரித்துள்ளது.

# தீவிரவாதிகளை உருவாக்க சதி: என்.ஐ.ஏ. தீவிர விசாரணை

இந்தியாவில் முஸ்லிம் தீவிரவாத படையை உருவாக்க சதித் திட்டம் தீட்டிய குற்றத்துக்காக அஜீஸ் அகமது என்கிற நபர் தேசிய புலனாய்வு முகமையால் (என்.ஐ.ஏ.) கடந்த வெள்ளிக் கிழமை பெங்களூரில் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“அஜீஸ் அகமது என்கிற ஜலீல் அஜீஸ் அகமது கடந்த வெள்ளிக் கிழமை விமானத்தில் தப்பியோட முயன்ற போது பெங்களூரில் கைது செய்யப்பட்டார். உலகம் முழுவதும் தடை செய்யப்பட்ட ஹிஸ்புத் தஹ்ரீர் அமைப்பின்தீவிர அடிப்படைவாத கொள்கையின் தாக்கத்தில் செயல்பட்டு வரும் 6 தீவிரவாதிகளை தேசிய புலனாய்வு முகமை கடந்த சில நாட்களாக தேடி வருகிறது. தாக்கி அல் தின் அல் நபனி என்கிற முஸ்லிம் அடிப்படைவாதி



யின் சித்தாந்தத்தைப் பின்பற்றி உலகெங்கிலும் இஸ்லாமிய தீவிரவாதத்தை நிலைநாட்டுவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டிருக்கும் நபர் பல இளைஞர்களை மூளைச்சலவை செய்து தடை செய்யப்பட்ட இயக்கத்தில் சேர்த்துள்ளதாகவும், ‘இஸ்லாமிக் கிலாபத்’ என்கிற முஸ்லிம் கிளர்ச்சியாளர்களை இந்தியாவில் உருவாக்கும் நோக்கத்துடன் தீவிரவாத கொள்கையை பரப்பி வந்ததாகவும் தேசிய புலனாய்வு முகமை நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# ரஷ்யாவின் பெல்கோரோட் பகுதியில் உக்ரைன் வேம்பயர் ஏவுகணை தாக்குதல்

ரஷ்யா மீது இரண்டாவது ஊடுருவலை ஆரம்பித்துள்ள உக்ரைன் ரஷ்யாவின் பெல்கோரோட் பகுதியில் வேம்பயர் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் கடந்த 30 திகதி இடம்பெற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், இதில் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். குறைந்தது 46 பேர்கள் காயங்களுடன் தப்பியுள்ளனர் என கூறப்படுகின்றது.

ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் ஓகஸ்ட் 6 ஆம் திகதி அதிரடியாக ஊடுருவிய உக்ரைன் படைகள், பல கிராமங்களை கைப்பற்றியுள்ளது.

தற்போது இரண்டாவது முறையாக பெல்கோரோட் பகுதியை உக்ரைன் படைகள் நோட்டமிட்டுள்ள நிலையில், இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மேலும் இந்த தாக்குதலின் போது, பிரதான சாலையில் வாகனங்கள் தாக்குதலுக்கு உள்ளானதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் திடீர் தாக்குதலால் ஸ்தம்பித்துப் போன மக்கள் வாகனங்களில் தப்பிக்க முயன்றதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.



குடியிருப்புகள் பல ஏவுகணை தாக்குதலில் சிக்கி தீக்கிரையாகியுள்ளதுடன் பெல்கோரோட் பகுதியில் இருந்து மக்களை வெளியேற்ற நடவடிக்கை முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையே, பெல்கோரோட் பகுதி ஆளுநர் புடயனமழள சமூக ஊடகத்தில் பதிவிடுகையில், பெல்கோரோட் பிராந்தியம் மொத்தம் ஏவுகணை அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளது.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும் என்றும் எச்சரித்துள்ளார். பெல்கோரோட் பிராந்தியத்தில் உள்ள Krasnoyaruzhsky மாவட்டத்தில் இருந்து 11,000 மக்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பெல்கோரோட் பகுதியானது கடந்த டிசம்பர் மாதமும் உக்ரைன் படைகளின் தாக்குதலுக்கு இலக்கானமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் தனிமையில் வாடும் முதியோர்கள் இதுவரை 37 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்

ஜப்பானில் நடப்பு ஆண்டின் முதல் 6 மாதங்களில் சுமார் 37 ஆயிரத்துக்கும் அதிகமான முதியோர்கள் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குடும்பத்தினரால் கைவிடப்பட்ட முதியோர்களே அதிகளவில் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களில் 4,000 பேர் இறந்து ஒரு மாதத்தின் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

அத்துடன். ஜப்பானில் தனிமையில் வாழும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



பக்கங்கள் 06

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 01/09/2024

## காருக்குள் ஒருவர் சுட்டுக் கொலை!

ஒன்ராரியோ, செப்டம்பர் 01

கடந்த வெள்ளிக்கிழமையன்று பிராம்ப்டனில் வாகனத்திற்குள் சுட்டுக் கொல்லப்பட்ட நபர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பீல் பொலிஸரர் 02




# சர்வதேச மாணவர்கள் பலரும் கனடாவைக் கைவிட்டனராம்!

### விண்ணப்பிப்போர் எண்ணிக்கை குறைந்தது

கனடா அரசு வெளிநாட்டவர்களுக்கு விதித்த கடும் கட்டுப்பாடுகள், கனடாவைக் கைவிட சர்வதேச மாணவர்களைத் தூண்டியுள்ளன எனலாம்.

ஆம், கனேடிய பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதாக, கனேடிய பல்கலைக்கழகங்களுக்கு பொறுப்பான Universities Canada என்னும் அமைப்பு தெரிவித்துள்ளது.

புலம்பெயர்தல் அமைச்சரான மார்க் மில்லர், 2024ஆம் ஆண்டில் சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கையை 35 சதவிகிதம் குறைக்க இருப்பதாக, ஜனவரி மாதம் அறிவித்திருந்தார். 02

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்துக்கு ஆதரவு

### ஒன்ராரியோ இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவிப்பு

ஒன்ராரியோ, செப்டம்பர் 01

வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத் தில் தமது அன்புக்குரியவர்களின் தலைவிதியை வெளிக் கொணரும் தமிழ் ஈழத்திலுள்ள அனைத்து தாய்மார்கள் மற்றும் குடும்பங்களுக்காக குரல் எழுப்புவதாக ஒன்ராரியோ மாகாண உறுப்பினரும், இணை அமைச்சருமான 02








## வலிந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமது சமூக ஊடகத்தில் அவரது இடுகையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

‘2,700 நாள்களுக்கும் மேலாக (7 வருடங்களுக்கும் மேலாக) தாய்மார்களும், குடும்ப உறுப்பினர்களும் தங்கள் அன்புக்குரியவர்களை அழைத்து வருவதற்காகப் போராடி வரும் வரலாற்றில் மிக நீண்ட தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஒன்றாகக் காணாமல் போனவர்களின் தமிழ்த் தாய்மார்களின் போராட்டம் நீடிக்கின்றது.

இலங்கை அரசினால் 100,000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டதன் மூலம், உலகிலேயே பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மிகப்பெரிய பிரசாரங்களில் ஒன்றாக இது உள்ளது. ஐ.சி.சிஇன் ஸ்தாபக உடன்படிக்கை யான ரோம் சட்டத்தின் கீழ் வலுக் கட்டாயமாக காணாமல் போதல் என்பது மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகும்.

இந்த நாளில், ஆயிரக்கணக்கான தாய்மார்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் வலியையும் வேதனையையும் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அதே நேரத்தில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலைப் பெறுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம்.’ - என்று உள்ளது.



Vijay Thanigasalam
@vijaythanigasalam

Today, on the International Day of the Victims of Enforced Disappearances, I am raising my voice for all the mothers and families in Tamil Eelam who are continuing to uncover the fate of their loved ones. The Tamil Mothers of the Disappeared protests is one of the longest continued demonstrations in history, taking place for over 2700 days (over 7 years), where mothers and family members have been protesting to bring their loved ones back.

The Sri Lankan state orchestrated one of the largest campaigns of enforced disappearances in the world, with over 100,000 Tamil people forcibly disappeared by the state. The crime of enforced disappearance is a crime against humanity under the Rome Statute, ICC's founding treaty.

On this day, we acknowledge the pain and suffering of the thousands of mothers and family members of the enforced disappeared while staying steadfast in our commitment to seek justice and accountability. #BringBackTamils




## காருக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபர் மீது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மில்ஸ்டோன் டிரைவ் மற்றும் செயின்ட் ட்ரோபஸ் கோர்ட்டில் உள்ள ஒரு குடியிருப்புக்கு மதியம் 1 மணிக்கு முன்னதாக சந்தேகத்திற்கிடமான வாகனம் ஒன்றுக்காக அதிகாரிகள் அழைக்கப்பட்டனர்.

அவர்கள் வந்து பார்த்தபோது, வாகனத்தில் ஒருவர் இறந்து கிடந்ததைக் கண்டனர் எனப் பொ லி ஸார் தெரிவித்தனர்.

அவரது குடும்பத்தினரின் வேண்டுகோளின் பேரில் பாதிக்கப்பட்டவரின் அடையாளம் வெளியிடப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், சம்பவம் தொடர்பாக விசாரணை அதிகாரிகள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 20 வயதான சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

அவர் மீது முதல்நிலை கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது எனினும். சந்தேக நபரின் பெயரை பொலிஸார் வெளியிடவில்லை.

## சர்வதேச...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மாணவர்களால் கனேடியர்களுக்கு வீடுகள் தட்டுப்பாடு, மருத்துவம் முதலான சேவைகளில் அழுத்தம் அதிகரிப்பதால் இந்த முடிவை எடுக்க இருப்பதாக அவர் அறிவித்திருந்தார்.

ஆனால், கனடா அரசு குறைக்க இருப்பதாக அறிவித்திருந்த அளவைவிட, கனடாவில் கல்வி கற்பதற்காக விண்ணப்பிக்கும் எண்ணிக்கை தற்போது குறைந்துவிட்டதாக கனடா பல்கலைக்கழகங்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கனடா பல்கலைக்கழகங்கள் அமைப்பின் தலைவரான கேப்ரியல் மில்லர் கூறும்போது, சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதால், அரசு எதிர்பார்த்ததைவிட பெரிய அளவில் நிதிப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

சர்வதேச மாணவர்களுக்கு அரசு விதித்த கட்டுப்பாடு, அவர்களுக்கு எதிர்காலம் குறித்த உறுதியற்ற நிலைமையை உருவாக்கிவிட்டதா கவும், அதனால் அவர்கள் வேறு நாடு களில் கல்வி கற்பதென முடிவு செய் திருக்கக் கூடும் என்றும் தெரிவித் துள்ளார்.




# ‘தமிழ் வன்’ ஊடக வாகனம் மீதான தீ வைப்பு கண்டிக்கின்றது கனடியத் தமிழர் காங்கிரஸ்

ஒன்ராரியோ, செப்டம்பர் 01

‘தமிழ் வன்’ ஊடகத்தின் வாகனம் மீதான தீ வைப்பு சம்பவத்தைக் கண்டித்துள்ளதுடன், சட்ட அமலாக்க நடவடிக்கைக்கு கனடியத் தமிழர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கனடியத் தமிழர் காங்கிரஸ் இன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் -

எஸ்.வி.மீடியாவின் பிரிவான தமிழ் வன் தொலைக்காட்சிக்குச் சொந்தமான ஒளிபரப்பு வாகனம் தீவைத்து எரிக்கப்பட்ட சம்பவம் உட்பட 2024 தமிழ் தெரு விழாவின் போதும் அதற்குப் பின்னரும் நடந்த வன்முறைச் சம்பவங்களை கனடியத் தமிழர் பேரவை (CTC) சந்தேகத்திற்கு இடமின்றி கண்டிக்கிறது. ஒகஸ்ட் 25, 2024 அன்று நடந்த இந்த வேண்டுமென்றே தீவைப்புச் சம்பவம், தமிழர் தெருவிழாவில், கலைஞர்கள், தன்னார்வத் தொண்டர்கள், ஊழியர்கள், விற்பனையாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு எதிராகத் துன்புறுத்தல், துஷ்பிரயோகம் மற்றும் வன்முறையில் ஈடுபடும் பல்வேறு குழப்பமான சம்பவங்களைத் தொடர்ந்து நடந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. மற்றும் தமிழ் சமூகத்தின் கனடிய விழுமியங்களையோ நம்பிக்கைகளையோ இவை பிரதிபலிப்பதில்லை. தமிழ் விழா எப்போதும் தமிழ் கலாசாரம், ஒற்றுமை மற்றும் பாரம்பரியத்தின் கொண்டாட்டமாக இருந்து வருகிறது. இது நமது பாரம்பரியங்களின் செழுமையை வெளிப்படுத்துவதற்கும் சமூக உணர்வை வளர்ப்பதற்கும் ஒரு தளமாகும். ஒரு சில நபர்களின் வன்முறையான நடத்தை ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் நெறிமுறைகளைபிரதிநிதித்துவப்படுத்தவும் முடியாது. எங்கள் சமூக உறுப்பினர்கள் மற்றும் எங்களை ஆதரிக்கும் அமைப்புகளை அச்சுறுத்தும், பிளவுபடுத்தும் அல்லது தீங்கு விளைவிக்கும் எந்த நடவடிக்கைகளையும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்.

தமிழ் வன் டிவி இந்த ஆண்டு தமிழ் விழாவில் ஒரு சேவை வழங்குநராக இருந்தது, மேலும் அவர்களின் வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிகவும் கவலையளிக்கிறது. இந்த வன்முறைச் செயல்கள் ஓர் ஊடகத்தின் மீதான தாக்குதல் மட்டுமல்ல, தமிழ் விழாவின் உணர்வு மற்றும் அது பிரதிபலிக்கும் விழுமியங்கள் மீதான தாக்குதலாகும். இந்த சம்பவங்களை முழுமையாக விசாரித்து, பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு சட்ட அமலாக்க அதிகாரிகள் உடனடி மற்றும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு கனடியத் தமிழர் பேரவை கேட்டுக் கொள்கிறது. அதிகாரிகளின் விசாரணைக்கு எங்களது முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவோம்.

கனேடிய தமிழ் சமூகம் இந்த தேசத்தின் கலாசார கட்டமைப்பிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது, மேலும் அமைதி, மரியாதை மற்றும் சமூகத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பு குறித்து நாங்கள் எப்போதும் பெருமைப்படுகிறோம். சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் வன்முறையை நிராகரித்து எங்களை வலிமையாக்கும் விழுமியங்களை நிலைநிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். ஒரு சிலரின் செயல்கள் நமது சமூகத்தின் சாதனைகள் மற்றும் அபிலாஷைகளை மறைக்காமல் பார்த்துக்கொள்வோம்.

அனைத்து சமூக உறுப்பினர்களும் தலைவர்களும் ஒன்று கூடி, இந்த வன்முறைச் செயல்களுக்கு எதிராக குரல் கொடுத்து, அமைதியான மற்றும் ஒன்றுபட்ட சமூகத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். இதுபோன்ற சம்பவங்கள் நம்மையோ அல்லது நமது எதிர்காலத்தையோ வரையறுக்காது என்பதை நாம் அனைவரும் ஒன்றாக உறுதிசெய்ய முடியும். - என்று உள்ளது.



# அல்பேர்ட்டாவின் செனட்டர்களாக வழக்கறிஞர், பேராசிரியர் நியமனம்

அல்பேர்ட்டா, செப்டம்பர் 01

பாடசாலைகளில் பிரதிப் பெயர்கள் குறித்த அல்பேர்ட்டாவின் திட்டமிட்ட சட்டத்தை கடுமையாக விமர்சிக்கும் ஒரு பெருநிறுவன வழக்கறிஞர் மற்றும் பேராசிரியர் இருவரும் இப்போது மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் செனட்டர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

செனட்டில் காலியாக உள்ள இடங்களை நிரப்ப மேரி சைமன் டேரில் ஃப்ரிடாண்ட்லர் மற்றும் கிறிஸ்டோபர் வெல்ஸ் ஆகியோரை கவர்னர்-ஜெனரல் பெயரிட்டுள்ளார் என பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ நேற்று அறிவித்தார்.

40 ஆண்டுகளுக்கும் மேலான சட்ட அனுபவமுள்ள ஒரு பெருநிறுவன சட்டத்தரணி, நீதிபதி, மத்தியஸ்தர் மற்றும் தொழிலதிபர் என அவரை ட்ரூடோவின் அலுவலக அறிக்கை குறிப்பிடுகிறது.

பாலியல் மற்றும் பாலின சிறுபான்மை இளைஞர்களின் பொதுப் புரிதலில் கனடா ஆராய்ச்சித் தலைவராக இருக்கும் வெல்ஸ் ஒரு கல்வியாளர். அறிவியல் நிபுணர் மற்றும் 2SLGBTQI சமூகத்திற்கான சாம்பியன் என்று அது கூறுகிறது.

2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட செனட் நியமனங்களுக்கான சுயாதீன ஆலோசனைக் குழுவினால் இரண்டு புதிய செனட்டர்களும் சிபாரிசு செய்யப்பட்டனர் எனப் பிரதமர் அலுவலகத்தின் அறிக்கை கூறுகிறது.

இது செனட்டர்கள் சுதந்திரமாக இருப்பதை உறுதி செய்கிறது.

16 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பாடசாலைகளில் தங்கள் பெயர்கள் அல்லது பிரதிப் பெயர்களை மாற்றுவதற்கு முன் பெற்றோர்கள் சம்மதிக்க வேண்டும் என்ற கொள்கைக்கான அல்பேர்ட்டா அரசாங்கத்தின் திட்டத்தை வெல்ஸ் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்காபரோவின் உயிரிழந்தவர் அடையாளம் காணப்பட்டார்

ஒன்ராரியோ, செப்டம்பர் 1 -

ஸ்காபரோவின் ஒக்ரிட்ஜ் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் 64 வயதுடைய நபர் ஒருவர் என டொராண்டோ பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

டென்போர்த் அவனியு மற்றும் டென்போர்த் ரோட் அருகில் உள்ள லேன்ட்ரி அவனியுக்கு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் அப்பகுதியில் பதிவாகியதை அடுத்து, 11:25 மணியளவில் பொலிசார் அழைக்கப்பட்டனர்.

அதிகாரிகள் வந்து, ஒரு வீட்டின் முன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஆண் ஒருவரைக் கண்டனர்.

அவர்கள் அந்த நபரை உயிர்ப்பிக்க முயன்றனர், ஆனால் அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

அவர் டொராண்டோவைச் சேர்ந்த 64 வயதான ஐயோனிஸ் கிரியாகோபுலோஸ் என சனிக்கிழமை பொலிசாரால் அடையாளம் காணப்பட்டார்.






# றொறன்ரோ மிருகக்காட்சிசாலையில் கூட்டிலிருந்து தப்பித்த ஒராங்குட்டான்

ஒன்ராரியோ, செப்டம்பர் 01

றொறன்ரோ மிருகக்காட்சிசாலையில், இந்த வாரத் தொடக்கத்தில் அதன் ஒராங்குட்டான்களில் ஒன்று எவ்வாறு அதன் கூட்டிலிருந்து தப்பித்தது என்பது தொடர்பில் மிருகக்காட்சிசாலை விளக்கமளித்துள்ளது.

மிருகக்காட்சிசாலையின் ஏழு சுமத்ரா ஒராங்குட்டான்களில் ஒன்றான கெம்பாலி - வியாழன் இரவு தனது வெளிப்புற வாழ்விடத்திலிருந்து தப்பி, அதற்கு 'சற்று வெளியே' ஒரு பகுதியில் அலைந்ததாக அதிகாரிகள் சமூக ஊடக இடுகையில் தெரிவித்தனர்.

'எதுவித அசம்பாவிதமும் இல்லாமல்' ஆண் ஒராங்குட்டான் தனது அடைப்புக்கு திரும்பியது எனவும், முன்னெச்சரிக்கையாக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திறமையான தொழிலாளர்களுக்குக் கனடாவில் நிரந்தரக் குடியுரிமை வழங்குவதற்கு அழைப்பு!

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (IRCC) கனடாவில் நிரந்தர குடியுரிமை பெற விரும்பும் வெளிநாட்டு நபர்களுக்கு, கனேடியன் எக்ஸ்பீரியன்ஸ் கிளாஸ் (Canadian Experience Class) திட்டத்தின் கீழ் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பிக்க இப்போது விண்ணப்பதாரர்கள் அதற்கான அனுமதியினை பெற முடியும்.

2024 ஆகஸ்ட் 27-ஆம் திகதி, கனேடியன் எக்ஸ்பீரியன்ஸ் கிளாஸ் (CEC) திட்டத்தின் கீழ் Express Entry அமைப்பின் மூலமாக 3,300 நபர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன.

இந்த அழைப்புகளில் Comprehensive Ranking System (CRS) மதிப்பெண் 507-ஆக இருந்தது.

இதற்கு முன், 2024 ஆகஸ்ட் 14-ஆம் திகதி, 3,200 நபர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன.

Canadian Experience Class என்பது கனடாவில் வேலை அனுபவம் கொண்ட திறமையான தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்டது.

நிரந்தர குடியுரிமைக்குத் தகுதியானவர் ஆகும் முன், குறைந்தபட்சம் ஒரு வருடம் முழுகால அல்லது சமமான பகுதி நேர வேலை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.




இந்த வேலை அனுபவம் கனடாவில் தற்காலிக குடியுரிமை நிலையில் இருக்கும்போது கிடைத்திருக்க வேண்டும்.

மேலும், அனுமதியில்லாமல் வேலை செய்திருந்தால், அல்லது பணிப்பொருள் அனுபவம் இலவச வேலை அல்லது சம்பளம் இல்லாத பயிற்சிகள் மூலம் கிடைத்தால், இந்த திட்டத்தில் தகுதி பெற முடியாது.

இதே ஆகஸ்ட் மாதத்தில் மாகாண நியமன திட்டத்தின் (Provincial Nominee Program) கீழ் இரண்டு முறை அழைப்புகள் விடுக்கப்பட்டன. 2024 ஆகஸ்ட் 26 அன்று 1,121 அழைப்புகள் அனுப்பப்பட்டன, மற்றும் 2024 ஆகஸ்ட் 13 அன்று 763 அழைப்புகள் அனுப்பப்பட்டன.

இந்த அழைப்புகளில் வழங்கப்பட்ட குறைந்தபட்ச அடிப்படை மதிப்பெண்கள் முறையே 694 மற்றும் 690 ஆக இருந்தன.



# தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர்களை குறைக்க பிரதமர் ட்ரூடோவின் அரசு முடிவு

கனடாவிற்குள் அனுமதிக்கப்படும் குறைவான ஊதியம் பெறும், தற்காலிக வெளிநாட்டுத் தொழிலாளர்கள், மற்றும் நிரந்தர குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா, வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகையைச் சமாளிப்பதில் சிக்கல்களை எதிர்கொள்வதால், வீட்டு வசதி, சுகாதார போன்ற பொதுச் சேவைகளில் அந்நாடு சவால்களைச் சந்திப்பதாகப் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு கனடாவின் மக்கள்தொகை வளர்ச்சியில் சுமார் 97 வீதம் குடியேற்றம் பங்கு வகித்ததாக கனேடிய அரசின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

கனடாவில் பயின்று அங்கு ஐ.டி., துறையில் வேலை பார்த்து வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராம்குமார் பிபிசி தமிழிடம் பேசியபோது, "இங்கு இப்போது தொழிலாளர் சந்தை மிக மோசமான நிலையில் இருக்கிறது. சராசரியான சம்பளத்தில் ஒரு சாதாரண வேலை வேண்டுமென்றாலே அதற்கு அதிகமான சிபாரிசுகள் தேவைப்படுகின்றன" என்கிறார்.

மேலும் ,"வெளிநாட்டினர் மட்டுமின்றி கனேடியர்களும் வேலை கிடைப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வேலையின்மை விகிதம் இங்கு அதிகமாக உள்ளது. இதற்கு இங்குள்ள கனேடியர்கள் குடியேற்றங்களைக் காரணமாகக் கூறுகின்றனர்.

"என்னதான் குடியேற்றப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் கனேடிய மக்களின் ஆதரவு அரசுக்கு முக்கியம். ஆகையால் இந்த நிலைமையைச் சரிசெய்ய வேண்டிய கட்டாயம் ட்ரூடோ அரசுக்கு ஏற்பட்டுள்ளது," என்று கூறினார்.

ஜஸ்டின் ட்ரூடோவும் அவரது அரசாங்கமும் சேவைகள் அல்லது வீட்டு வசதியை மேம்படுத்தாமல் குடியேற்றத்தை அதிகரிப்பதாக விமர்சிக்கப்பட்டனர்.

அதேநேரத்தில், கனடாவின் வேலையின்மை விகிதம் கடந்த இரண்டு மாதங்களில் 6.4 வீதமாக அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் 14 லட்சம் மக்கள் வேலையில்லாமல் உள்ளனர்.

ஒரு செய்தியாளர் கூட்டத்தில் பேசிய கனடா பிரதமர் ட்ரூடோ, தொழிலாளர் சந்தையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகத் தற்காலிக வெளிநாட்டுத் தொழிலாளர்கள் திட்டத்தை மாற்றியமைப்பதாகக் கூறினார்.

"ஒரு நல்ல வேலையைக் கண்டுபிடிக்கப் போராடும் கனேடியர்களுக்கு இது நியாயம் செய்யவில்லை. தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர்களுக்கும் இது நியாயம் செய்யவில்லை. அவர்களில் சிலர் தவறாக நடத்தப்பட்டு, சுரண்டப்படுகிறார்கள்" என்று அவர் கூறினார்.

(நன்றி:பிபிசி தமிழ்)